
# V. Sivalingam 70



16th March 2017
London



# தோழர்
# விசுவலிங்கம் சிவலிங்கம்

# 70

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் 1969இல் தொடங்கிய அரசியல் செயற்பாட்டாளரின் 70வது பிறந்த தினத்தின் போது வெளியிடப்படுகிறது

# FAMILY DETAILS

| | |
|---|---|
| Birth Place: | Kadduvan, Tellippalai, Sri Lanka |
| Date of Birth: | 16 March 1947 |
| Father: | Late Mr Sinnathamby Visuvalingam |
| Mother: | Late Mrs Sivakami Visuvalingam |
| Education at: | Vigneswara Vidyalayam, Kuppilan<br>Vasavilan MMV, Vasavilan<br>Skanda Varothaya College, Chunnakam |
| Wife: | Mrs Rajinidevi Sivalingam<br>Daughter of Late, Mr & Mrs Vaithilingam of Valvetti |
| Sons | Mr Kuvera Sivalingam<br>Mr Nelson Sivalingam<br>Mr Prasanna Sivalingam |
| Sister: | Mrs Parameswary |
| Brothers: | Mr Suntharalingam<br>Mr Rajalingam<br>Mr Tharumalingam<br>Mr Panchalingam<br>Mr Sathiyalingam |

# கனவுகள் கண்ட நீண்ட பயணம்

இலங்கையின் ஆறாவது பொதுத்தேர்தல் 1970 மே மாதம் இடம்பெறும் என்கின்ற அறிவிப்பு 1969ம் ஆண்டின் இறுதியில் வெளிவருகிறது. காங்கேசன்துறைத் தொகுதியில் திரு சா ஜே வே செல்வநாயகத்தை எதிர்த்து கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளராக போட்டியிடுவதற்கான வேலைகளை தோழர் வி பொன்னம்பலம் தொடக்குகிறார். நானும் தோழர் சிவலிங்கமும் முதன்முதலாக சந்திக்கின்றோம். ஏறத்தாள 50 நீண்ட ஆண்டுகள். எந்தவித இடையூறும் இன்றித் தொடருகின்ற பயணத்தையும் அதன் கனவுகளையும் ஒருமுறை நினைத்துப்பார்க்க தோழரின் எழுபதாவது பிறந்ததினம் எனக்குச் சந்தர்ப்பம் தந்துள்ளது. இனிமையும் வெறுமையும் நிறைந்த இந்த நீண்ட பயணம் எமது சரித்திரத்தின் ஒரு பக்கம்.

எமது சமூகத்தில் **காத்திரமானதும் முற்போக்கானதுமான மாற்றங்கள்** வேண்டும் என்ற கனவுகளுடன் எங்களின் பயணம் தொடங்குகிறது. தை மாதம் தொடக்கம் பகலில் வீடு வீடாகச் சென்று பிரச்சாரம். இரவில் பொதுக்கூட்டம். இந்தப் பிரச்சாரக் கூட்டங்களில் ஆரம்ப பேச்சாளர்களில் ஒருவாராகச் சிவலிங்கம் விளங்கினார். நான் சில கூட்டங்களில் பேசினேன். தேர்தல் சூடு பிடிக்க இந்தக் கூட்டங்களில் பேசுவதற்கு தென்னிலங்கையில் இருந்து கம்யூனிஸ்ட் கட்சியினதும் சமசமாஜக் கடசினதும் தலைவர்கள் வரத் தொடங்கினார்கள். தோழர்கள் டாக்டர் விக்கிரமசிங்கா, பீட்டர் கெனமன், எம் ஜி மெண்டிஸ், என் எம் பெரேரா, கொல்வின் ஆர் டி சில்வா, பேர்னாட் சொய்சா, திருமதி விவியன் குணவர்த்தனா போன்றோருடன் பழகுவதும் அவர்களின் அறிவு நிறைந்த பேச்சுக்களை முழுவதுமாக மெய்மறந்து கேட்பதும் எங்களுக்கு ஒரு புதிய, இனிய அனுபவமாக இருந்தது. 50 ஆண்டுகளின் பின்பாகத் திரும்பிப் பார்க்கின்ற வேளையில் ஆச்சரியமாக இருக்கின்றது. அப்படியான பேச்சு ஒன்றினை எந்தத் தமிழ்த் தேசியத் தலைவரிடம் இருந்தும் கிடைக்க வில்லையே என்பதுவும் இனியும் கிடைக்கும் சந்தர்ப்பம் இருப்பதாகத் தெரியவில்லை என்பதுவும் ஆச்சரியம் என்றாலும் வருத்தத்திற்கு உரிய உண்மை.

எங்களுடன் இந்தப் பயணத்தில் பலர் இணைந்தார்கள். பன்னாலையைச் சேர்ந்த தோழர்கள் கார்த்திகைக்குமார், நந்தீஸ்வரன் ஆகிய இருவரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

மே மாதம் 27ம் திகதி நடந்த 1970 பொதுத்தேர்தலில் தோழர் வி பொன்னம்பலம் காங்கேசன்துறைத் தொகுதியில் 8164 வாக்குகளைப் பெற்றுத் தோல்வியடைந்தார். ஆனாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் போட்டியிட்ட சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என்பன இணைந்த ஐக்கிய முன்னணி வரலாறு காணாத வெற்றியைப் பெற்று ஆட்சி அமைத்தது. இது நாடுமுழுவதும் இடதுசாரிச் சிந்தனை கொண்டவர்கள் மத்தியில் ஊற்சாகத்தை உருவாக்கியது.
தமிழ்மக்கள் பெருவாரியாக வாழ்கின்ற வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் இடதுசாரிகளை நோக்கி – குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சியை நோக்கி - இளைஞர்களின் பார்வை திரும்பியது.
இந்த அரசியலுக்குப் புதிது என்றாலும் தோழர் சிவலிங்கமும் நானும் காங்கேசன்துறைத் தொகுதியில் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கக் கிளைகளை உருவாக்குவதில் முன்னின்றோம். யாழ் மாவட்ட கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க மாநாட்டை 1970 இறுதியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் பல நூறு இளைஞர்கள் அணிவகுத்து உற்சாகத்துடன் பங்குபற்ற நடாத்தினோம். இந்தக் காலங்களில் தினமும் தோழர் வி பி யுடன் சந்திப்பு, இளைஞர்களை இணைத்த கூட்டங்கள் (வகுப்புகள்) என எங்கள் நடவடிக்கைகள் அமைந்தன.
நாங்கள் மூவரும் (சிவலிங்கம், கார்த்திகைக்குமார், நான்) பிற்பகலில் ரியூசன் வகுப்புக்கள் (தனிப்பட்ட உழைப்பு) பின்னர் அரசியல் என நேரமே இல்லாமல் வேலைசெய்தோம். மிகவும் பிரயோசனமான ஆனால் இனிதான இளமைக் காலம்.
இடதுசாரித் தலைவர்களுடான தொடர்பு எமக்குக் காத்திரமான அரசியல் அறிவினைத் தந்தது. 1972இல் நான் யாழ்ப்பாணம் கச்சேரியிலும் சிவலிங்கம் யாழ்ப்பாணத்தில் அமைந்த கட்டிடப் பொருட்கள் திணைக்களத்திலும் வேலை செய்தோம். எல்லா வேலைகளும் முடிந்தபின்பாக மகாஜனக் கல்லூரிக்கு அண்மையில் உள்ள அம்பனைச் சந்தியில் வேறும் பல இளைஞர்களுடன் சேர்ந்து எங்களின் **'கனவு உலகை'**

விவாதப்பொருளாக்கி கதைப்போம். எங்களின் பங்களிப்பு வடபகுதி இடதுசாரி இளைஞர்களின் தலைவர்களாக எம்மை உருவாக்கியது. நாம் கனவுகண்ட உலகைச் சிருஷ்டிப்பதற்காக அறிவை வளர்த்தோம். ஆற்றலை வளர்த்தோம். ஏனைய இளைஞர்களுக்கு அவற்றைப் போதித்தோம். தென்னிலங்கையில் இருந்து இடதுசாரி தலைவர்களை அழைப்பித்து பல நூறு கூட்டங்கள் எம்மால் இக்கால கட்டங்களில் நடாத்த முடிந்தது.

70இல் அமைந்த **'ஐக்கிய முன்னணி அரசு'** நாடுமுழுவதும் ஒரு உற்சாக அலையை உருவாக்கி இருந்தாலும் தென்னிலங்கையில் வேலையில்லாப் பிரச்சினையை முதன்மைப் படுத்தி ரோகன விஜயவீரா தலைமையில் சிங்கள இளைஞர்கள் ஜே வி பி என அரசியல் மயப்படுத்தி ஒரு ஆயுதக் கிளர்ச்சிக்குத் தயாரானார்கள். இதே நேரம்உயர் கல்வித் தரப்படுத்தலைக் காரணமாக்கி வட பகுதி தமிழ் இளைஞர்கள் **மாணவர் பேரவை** என்று ஆங்காங்கே கிளர்ச்சிகளை தொடங்கியதுடன் எம்மீதான வன்முறைகளையும் தொடக்கினார்கள். இந்த வன்முறைகள் ஆயுதப் பயிற்சி, துரோகிகள் களையெடுப்பு என பரிமாணம் பெற்றன. 1971 ஏப்பிரலில் ஜே வி பி தலைமையில் நடந்த இளைஞர் கிளர்ச்சி அரசாங்கத்தினால் அழிக்கப்பட்டது. பல ஆயிரம் இளைஞர்கள் கொல்லப்பட்டார்கள்.

1972 மே 22இல் இலங்கை குடியரசாக, புதிதாக உருவர்க்கப்பட்ட அரசியல் அமைப்புடன் பிரகடணப் படுத்தப்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணி உருவானது. இளைஞர் பேரவை உருவாகி குடியரசுப் பகிஸ்கரிப்பை முதன்மைப்படுத்தி கறுப்புக்கொடிப் பிரச்சாரம், பாடசாலை மாணவர் பகிஸ்கரிப்பு என விடயங்கள் முடுக்கி விடப்பட்டன. இவற்றின் மறுபக்கத்தில் இலங்கை குடியரசாக மாற்றம் அடைந்தமையை நாங்கள் ஒரு நல்ல அரசியல் முடிவாகப் பார்த்தோம். இது இடதுசாரிகளின் நீண்டகாலக் கனவு. தமிழ் மக்களைப் பாதிப்பதாக இந்த அரசியல் அமைப்பை தமிழ் தலைவர்கள் சொன்னாலும் தமிழ் இடதுசாரிகள் குறிப்பாக நாங்கள் இருவரும் **'அந்நிய ஆதிக்கத்தில் இருந்து – பிரித்தானிய ஆதிக்கத்திலிருந்து - முற்றாக விடுபடுகின்ற புதிய குடியரசு**

**அமைப்பை'** நல்லதாக எண்ணினோம். அதனை வரவேற்றோம். இதன் ஒரு பகுதியாக நாம் உருவாக்கி நடாத்தி வந்த காங்கேசன்துறைத் தொகுதி அபிவிருத்திச் சங்கத்தின் சார்பாக **'குடியரசு மலர்'** ஒன்றினைத் தமிழில் வெளியிட்டோம் குடியரசு சம்பந்தமாகத் தமிழில் வெளிவந்த ஒரே மலர் இது தான். முழுத் தமிழினமும் எதிர்த்திசையில் இருந்தாலும் நாம் இருவரும் ஆசிரியர்களாக இருந்து இந்த மலரை வெளிட்டோம். இருவரும் இணைந்து ஒரு கட்டுரையையும் அந்த மலரில் எழுதினோம். புதிய குடியரசு அரசியல் யாப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து திரு செல்வநாயகம் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமாச் செய்தார். அவ்வளவு தூரம் எங்களுடைய அரசியலும் அரசியல் கனவுகளும் இருந்தன. ஆரம்பகால வன்முறைகளை துச்சமாக மதித்து நாங்கள் செய்த அரசியல் இன்று மீண்டும் திரும்பிப் பார்க்கும்போது வியப்பாக இருக்கிறது.

எழுபதுகளில் காலம்சென்ற மறுமலர்ச்சிக்கால எழுத்தாளர் 'வரதர்' **வெள்ளி** என்கின்ற மாத சஞ்சிகையை வெளியிட்டார். அதில் பல மாதங்கள் தொடர்ந்து வி பொன்னம்பலத்திடம் வாசகர்கள் கேட்ட கேள்வி – பதில் பகுதி வெளிவந்தது. வாசகர்களின் கேள்வி வரதருக்கு வந்ததன் பின்பாக அதனைத் தொகுத்து வி பொன்னம்பலத்திடம் அனுப்பி வைப்பார். வி பிக்கு நேரமின்மையால் எம்மிடம் தருவார். நாங்கள் பதிலை எழுதி வி பியிடம் கொடுப்போம். அவர் வேண்டிய திருத்தங்களைச் செய்து மெருகூட்டி வரதருக்கு அனுப்புவார். ஒருமுறை அன்றைய துணைக் கலாச்சார அமைச்சராக இருந்த சிங்கள கவிஞர் சோமவீர சந்திரஸ்ரீ அவர்களை அழைத்து அம்பனைச் சந்தியில் ஒரு கூட்டம் நடாத்தினோம். அதில்தான் ஜெயபாலன் (கவிஞர் வ ஐ ச ஜெயபாலன்) முதல் தடவையாக மேடையேறினார். இப்படி அரசியல் சார்ந்த எமது செயற்பாடுகள் தமிழ் இளைஞர் பேரவையினரின் பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் தொடர்ந்து நடந்தன. 1974 தமிழாராச்சி மாநாடும் அதில் நடந்த மரணங்களும் அரசியலாக்கப்பட்டன. இவைகள் எமது அரசியலுக்கு தடைபோட

யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைய வேண்டிய தேவையை வலியுறுத்தி கம்யூனிஸ்ட் கட்சியும் வாலிபர் சங்கமும் பல நடவடிக்கைகளை முன்னெடுத்தன. ஜிஜி பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் யாழ்ப்பாணத்தில் ஒரு **இந்துப் பல்கலைக்கழகத்தையும்** எஸ் ஜே ஜ வி செல்வநாயகம் தலைமையிலான தமிழரசுக் கட்சியினர் திருகோணமலையில் ஒரு **தமிழ்ப் பல்கலைக்கழகத்தையும்** அமைக்குமாறு கோரி தங்களுக்குள் பிரச்சினைப்பட்டு எதையும் பெறாத வேளையில் 1975இல் யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்கும் நடவடிக்கையை கம்யூனிஸ்ட்களும் முற்போக்காளர்களும் அறிவுச்சமூகமும் இணைந்து மேற்கொண்டனர். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியையும் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியையும் உள்ளடக்கியதாக தமிழறிஞரும் முற்போக்காளருமான **பேராசிரியர் கைலாசபதி** தலைமையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகம் உருவாக்கப்பட்டது. நாங்கள் அந்தச் செயற்பாடுகளில் முக்கிய ஆதரவாளர்களாகச் செயற்பட்டோம். அன்று உயர் கல்விக்கான அமைச்சரவையின் குழுவுக்குத் தலைமைதாங்கிய **தோழர் பீற்றர் கெனமனே** இந்தப் பல்கலைக் கழகம் அமைவதற்கான முக்கியமான காரணியாவார்.
அன்றைய பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பல்கலைக்கழகத்தைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்க யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவரை வரவேற்க ஒரு ஊர்வலத்தை ஒழுங்கு செய்வதில் முன்னின்று செயற்பட்டோம். கடந்த முப்பது ஆண்டுகளாகத் தமிழ்த்தேசியத்தின் முக்கிய மையமாக விளங்குகின்ற யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் கம்யூனிஸ்ட்கள் முன்னின்ற இடதுசாரிகளின் செயற்பாட்டால் கிடைத்தது என்பதுதான் உண்மை. இதனைத் திறந்து வைக்கும் நிகழ்ச்சியை தமிழ்த் தலைமைகளும் இளைஞர் பேரவையினரும் கறுப்புக்கொடி காட்டி பகிஸ்கரிப்பில் ஈடுபட்டமைதான் **தமிழினத்தின் கறுப்பு வரலாறு** என்று சரித்திரம் சொல்லும்.

1975இன் ஆரம்பத்தில் அரசாங்கம் காங்கேசன்துறைத் தொகுதிக்கான இடைத்தேர்தலை நடாத்தத் தீர்மானித்தது.

திரு செல்வநாயகம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பளராகவும் தோழர் வி பொன்னம்பலம் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஐக்கிய முன்னணி அரசின் வேட்பாளராகவும் போட்டியிட்டனர். தமிழ் இளைஞர்கள் வன்முறையையும் ஆயுதத்தையும் தொடங்கிய காலம். எந்தவித அரசியல் அறிவும் அற்றவர்களாக அரச எதிர்ப்பு (சிங்கள எதிர்ப்பு) என்பதை மட்டுமே மனதில் இருத்தி தங்கள் செயற்பாடுகளை ஆரம்பித்தனர். இந்தத் தேர்தலிலும் ஐந்து ஆண்டுகள் அனுபவம் கொண்ட இளைஞர்களாக நாங்கள் இருவரும் பிரச்சாரத்தின் முன்னணியில் செயற்பட்டோம். 'துரோகிகள்' என்ற பட்டத்துடன் எங்களின் பிரச்சார நடவடிக்கைகள் இருந்தன. அந்த வேளையிலேயே துரோகிகளுக்கான தண்டனை மரணம் என்ற கருத்துச் சுடர்விட்ட காலம்.

தமிழ் தலைமை முழுமையாகவும் பல ஆயிரம் இளைஞர்கள் பட்டாளமாகவும் காங்கேசன்துறைத் தொகுதியை முற்றுகையிட்டு பிரச்சாரத்தை நடாத்தினர். அமைச்சர்களான தோழர்கள் பீற்றர் கெனமனும் என் எம் பெரேராவும் காங்கேசன்துறைக்கு வந்திருந்து பிரச்சாரம் செய்தனர். திரு எஸ் ஜே வி செல்வநாயகத்தின் தேர்தல் பிரச்சாரம் தனிநாட்டுக் கோரிக்கைக்கான தளமாக உருவாக்கப்பட்டது. சிறைச்சாலையிலிருந்து வெளியேவந்த காசி ஆனந்தனுக்கு இளைஞர்கள் நெற்றியில் இரத்தப்பொட்டு வைத்து வன்முறைக் கலாச்சாரத்துக்கான தமிழர் விடுதலைக் கூட்டணியினதும் திரு எஸ் ஜே வி செல்வநாயகத்தினதும் அங்கீகாரத்தைப் பெற்றனர். தமிழ்த் தலைவர்கள் ஒவ்வொரு வீட்டுக்கும் நேரடியாகச் சென்றனர். அதுவரை நடந்த எந்தத் தேர்தலிலும் எனது வீட்டுக்குத் தமிழ்த் தலைவர்கள் எவரும் வந்ததில்லை. வாக்குக் கேட்டதில்லை. முதல்முறையாக இந்தத் தேர்தலில் தலைவர்கள் எனது வீட்டுக்கு வந்திருந்து வாக்குக் கேட்டார்கள். 1975 பெப்ரவரி 6ம் திகதி நடைபெற்ற இந்த இடைத்தேர்தலில் திரு எஸ் ஜே வி செல்வநாயகம் 25927 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார். 70 பொதுத் தேர்தலில் வெறும் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டுப் பெற்றதைவிட (8164) ஐக்கிய முன்னணி அரசின் வேட்பாளராகப் போட்டியிட்டு 1300 மேலதிக வாக்குகளை (9457) தோழர் வி பி பெற்றார். வன்முறை இல்லாமல்

இருந்திருந்தால் இலங்கை கம்யூனிஸ்ட்டுக்களின் அரசியல் வேர் விட்டிருக்கும் என்றே நினைக்கின்றேன்.

இந்தத் தேர்தலின் பின்னராக தமிழ் இளைஞர்களின் நடவடிக்கைகள் தீவிரமாயின. வன்முறைகள் இடதுசாரிகளை நோக்கித் திரும்பின. 1975 யூலை 27இல் அல்பிரட் துரையப்பா படுகொலை செய்யப்பட்டார். கிறிஸ்த்தவரான துரையப்பா ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலுக்கு வழிபடச் செல்வார். தனது நண்பர் யாருடனாவது பாதுகாப்புக்களின்றியே அவர் செல்வது வழமை. அன்றும் ஆயுதங்களற்ற அல்பிரட் துரையப்பாவைச் சுட்டுக்கொன்று பிரபாகரன் வீரநாயகனானார். இதுவே ஆயுதப்போராட்டத்தின் ஆரம்பம் என்று சொல்லப்பட்டது. அல்பிரட் துரையப்பாவின் மரணச்சடங்கிலும் ஊர்வலத்திலும் நானும் தோழர் சிவலிங்கமும் கலந்து கொண்டோம்.

இதன் பின்னர் நான் 5 வருடங்களிற்கு வெளிநாடு செல்ல முடிவெடுத்து 1975 செப்டம்பரில் நண்பர்களின் உதவியுடன் லண்டனுக்கு வந்தேன். நான் வந்ததன் பின்னராக தோழர் வி பொன்னம்பலம் கம்யூனிஸ்ட் கட்சியுடன் முரண்பட்டு **'செந்தமிழர்'** இயக்கத்தை உருவாக்கினார். காலம்சென்ற தோழர் சிவா சுப்பிரமணியமும் தோழர் சிவலிங்கமும் வி பியுடன் இணைந்து சிலகாலம் செந்மிழர் இயக்கத்தில் செயற்பட்டனர். 1977 பொதுத்தேர்தல், ஜே ஆரின் பெருவெற்றி, தனிநாட்டுக் கோரிக்கையின் வெற்றி என்பன தோழர் சிவலிங்கத்தைப் பாதித்தது யு என் பி அரசாங்கம் நினைத்த வேளைகளில் எல்லாம் நினைத்த இடங்களுக்கு அதிரடியாக மாற்றம்செய்து தோழர் சிவலிங்கத்தையும் மனைவியையும் பந்தாடினர். நான் 1980இன் ஆரம்பத்தில் தெல்லிப்பழையில் திருமணம் முடித்த வேளையில் நிறைமாதக் கர்ப்பிணியான தனது மனைவி ராஜியுடன் வந்திருந்து வாழ்த்தினார். அப்போதே வெளிநாடு செல்லும் முடிவிற்கு அவர் வந்துவிட்டார்.
1982இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஜே ஆர், கெக்டர் கொப்பேகடா ஆகியோரை எதிர்த்துப் போட்டியிட்ட ஜே வி பி தலைவர் ரோகன விஜயவீராவை ஆதரித்து யாழ் மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டங்களில் பேசினார். இதனை அறிந்த கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரான

(சீமெந்துத் தொழிற்சாலைத் தொழிலாளி) கார்த்திகேசு என்பவர் சிவலிங்கத்தைச் சந்தித்த வேளையில் கட்சிக்கு எதிரான நிலையை எடுக்க வேண்டாம் எனக் கூறியமை இவரின் மனதை நெருடியதாகப் பின்னர் குறிப்பிட்டார்.

1982,ன் இறுதியில் லண்டனுக்கு வந்தவர் சுமார் ஒரு வருடம் என்னுடன் தங்கினார்.

**இங்கே**

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (TELO),
Campaign for the Release of Eelam Political Prisoners ( CREPP),
ஈழப் பிரச்சார ஒன்றியம் (ESC),
Campaign for Democracy and Justice (CDJ)
புலம்பெயர் இலக்கியச் சந்திப்பு

என எங்கள் இருவரின் பயணமும் தொடர்ந்தன. இவற்றில் சில நாம் வரித்துக்கொண்ட கோட்பாடுகளுக்கு முரணானவை. இந்த நிலையை நாம் சுயவிமர்சனத்துக்கு உள்ளாக்க வேண்டும். ஆனாலும் நாம் இருவருமே எம்மண்ணின் இடதுசாரிகளுடான தொடர்புகளை இன்றுவரை பேணியே வருகின்றோம்.

இந்தவேளையில் எங்கள் இருவருடைய அரசியல் ஈடுபாட்டிற்கு (சிலர் பயித்தியம் என்பார்கள்) இரண்டு சம்பவங்களை சொல்லுவது பொருத்தம் என நினைக்கின்றேன். 1975ம் ஆண்டு இங்கு வருவதற்கு முன்னதாக நான் ஒரு வீட்டினைக் கட்டியிருந்தேன். அந்த வீட்டிற்கு **சோவியத் யூனியனின் தலைமையகமான** 'கிரெம்ளின்' என பெயர் சூட்டியிருந்தேன். சிவலிங்கம் தனது மூத்த மகனுக்கு **சே குவேரா** நினைவாக குவேரா என்றும், இரண்டாவது மகனுக்கு **நெல்சன் மண்டேலா** நினைவாக நெல்சன் என்றும் பெயர் சூட்டியமையை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி சம்பந்தப்பட்ட அரசியலை நான் தொடர்ந்து ஆதரித்து வருகின்றேன். இதில் மகிந்த ராஜபக்ச அரசாங்கத்துக்கான ஆதரவும் அடங்கும். ஆனால் சிவலிங்கம் நல்லாட்சி அரசாங்கத்தின் உருவாக்கத்திலும் புதிய அரசியல் யாப்பு உருவாக்கத்திலும் சமசமாஜக் கட்சியின் முன்னாள் உறுப்பினரான ஜயம்பதி விக்கிரமரத்தின MP அவர்களுடன் இணைந்து செயற்படுகின்றார்.

இப்படியான சில முரண்பாடுகள் இருந்தாலும் கடந்த நாற்பத்தெட்டு ஆண்டுகள் இந்த இனிய தோழமை தொடருகிறது.

நான் இங்கு வந்த சில மாதங்களில் சிவலிங்கத்தின் தகப்பனார் விசுவலிங்கம் அவர்கள் காலமாகிவிட்டார். அவருடைய மரணச்சடங்கு இடம்பெற்ற அன்று எனது தகப்பனார் சென்று அன்றைய தினத்துக்கான உணவை வழங்கினார். அதேபோல பின்னர் சில மாதங்களில் எனது தகப்பனார் நாகலிங்கம் (1976-December) காலமான போது சிவலிங்கத்தின் தம்பிமார் மரணச்சடங்கின் பின்னரான உணவினை வழங்கியிருந்தார்கள்.

அவரின் சகோதரர்கள் அனைவரும் என்னையும் ஒரு அண்ணனாகவே கருதி அன்பு செலுத்தி வருகிறார்கள். அவரின் மனைவி ராஜிக்கு நான் எப்போதுமே ஒரு அண்ணன்தான். மகன்கள் குவேரா, நெல்சன், பிரசன்னா ஆகியோரும் என்னை விருப்பத்துக்கு உரிய மாமாவாகவே நினைத்து நடக்கிறார்கள். எனது தாயார் 2007இல் இங்கே காலமான வேளையில் பேரப்பிள்ளைகளாக நினைத்து மூவரும் பந்தம் பிடித்த நிகழ்வு நெகிழ்ச்சிக்கு உரியது. அதுபோலவே எனது சகோதரர்களும், மனைவி ஜெயா, மகன் ஜனகன் ஆகியோரும் சிவலிங்கத்துடனும் அவரின் குடும்பத்துடனும் நல்ல சந்தோசமான உறவினைப் பேணி வருகின்றனர்.

இந்த இனிய நினைவுகளுடன் எனது இனிய நண்பர், தோழர் சிவலிங்கத்தின் எழுபதாவது பிறந்த தினத்தின்போது அவரின் அர்ப்பணிப்புடன் கூடிய ஆர்ப்பாட்டம் இல்லாத பொதுத் தொண்டு தொடர வாழ்த்துகின்றேன்.

***நாக சிறிகெங்காதரன்*** ***16 மார்ச் 2017***

*1969இல் இருந்து அரசியல், பொதுவேலைகளில் தோழர் சிவலிங்கத்துடன் இணைந்து வேலைசெய்பவர்*

# என் தோழமைக்கு அகவை 70

எழுபதுகளின் ஆரம்பத்தில் நான் கொக்குவில் பொற்பதி வீதியில் வாழ்ந்த காலம். தினம் மாலைநேரம் கட்சி அலுவலகம் செல்வது வாடிக்கை. யாழ் தொழில்நுட்பக் கல்லூரியும் அதே வழியில். கல்லூரியின் முகப்பில் புளியமரங்கள். கூடவே பஸ்தரிப்பும். அங்கே ஒருகூட்டம் பலத்த ஆரவாரத்துடன் பால் வித்தியாசம் இன்றிக் கூடிநிற்கும். இவர்களின் நடுவே ஒருவர் ஆரவாரமாகக் கதைத்துக்கொண்டு நிற்பார். பெரிய களேபரமான சத்தம். இது அப்படியே கொக்குவில் புகையிரத நிலையம் நோக்கி நகரும். பாதி பஸ் மூலம் யாழ் நகருக்கு நகரும். கேட்ட குரலாக இருக்கிறதே என்று நின்று பார்த்தால், நடுவில் நின்று கதைப்பது தோழர் சிவலிங்கம் தான் என்பது தெரியும். தனக்கு என்று ஒருகூட்டத்தைத் தான் வாழும் சூழலில் ஏற்படுத்திக்கொள்வார். அதை இன்றும் தொடர்ந்து செய்கின்றார். அது இவர் சுபாபம்.

எழுபதுகளின் ஆரம்பம், ஐக்கிய முன்னணி அரசின் வெற்றி. அதைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தின் விஸ்தரிப்பு. அப்பொழுது ஒன்றாகப் பயணித்தவர்கள்தான் நாங்கள் மூவர் – தோழர் சிவலிங்கம், தோழர் கெங்காதரன், மற்றது நான். இதுவரை இடைத்தடங்கல்கள் இல்லாது ஒரு இலட்சியத்திற்காக தொடர்ந்து இயங்கிவருவது என்பது, வேறு வேறு கட்சிகளிலோ, இயக்கங்களிலோ, இவ்வளவு நீண்ட பயண ஒருங்கிணைவு இருந்திருக்கும் என நான் நினைக்கவில்லை. இன்றும் தொடர்கிறது. நாளையும் தொடரும்.

யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக் கழகத்திற்கான முன்னெடுப்புக்களில் எங்கள் வாலிபர் சங்கம் கணிசமான பங்களிப்பைச் செய்தது. பலகருத்தரங்குகளை ஒழுங்குசெய்து, இதன் முக்கியத்துவதை விளங்க வைத்தது. இதில் தோழர் சிவலிங்கத்தின் பங்கு அளப்பரியது. பல்கலைக்கழகத் திறப்புவிழாவன்று எங்கள் வாலிபர் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட ஊர்வலம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது. இதில் தோழர்கள்

சிவலிங்கம், கெங்காதரன் போன்றோரின் அமைப்பு வேலைகள் பாராட்டப்பட வேண்டியவை.

1975 காங்கேசன்துறை இடைத்தேர்தலில் தோழர் வி பொன்னம்பலத்தின் (VP) வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் வேலைசெய்தவர்களில் தோழர் சிவலிங்கத்தின் செயற்பாடு மிகப்பெரியது. இதில் தனது பேச்சாற்றலை வளர்த்துக்கொள்ளக் களமாக அமைந்தது. பொருளாதார நெருக்கடிகள், குடும்பச்சுமை, அரசியல் ஸ்திரமின்மையும் படுகொலைகளும் எனப் பலகாரணிகள் இவரை வெளிநாடு செல்ல நிர்ப்பந்தித்தது. இங்கு வந்தும் தனது நிதானமாகக் கொண்ட கொள்கைகளின் வழிநின்று தனது அரசியல் பணியைத் தொடர்ந்தார். ரிபிசி வானொலி (TBC) அதற்கு வாய்ப்பாக அமைந்தது. எவ்வளவோ மிரட்டல்களிற்கும், வசைபாடல்களிற்கும் மத்தியில் வைராக்கியத்துடன் தனது பணியைத் தொடர்ந்து செய்தார். வசை பாடியோர் வாடிப்போனார்கள். இந்தப் பணி இன்றும் தொடர்கின்றது. அதர்மம் தோற்கும். நீதி வெல்லும் என்பதற்கு இவர் வாழ்வு ஒரு சாட்சியம்.

ஆய்வுக் கட்டுரைகளும், பகுப்பாய்வுத் தன்மைகளும், மொழிபெயர்ப்பு ஆற்றலும் இவர் வாழ்வின் இலட்சியங்களை மேலும் மெருகூட்டுகின்றன. இவராக எதிரிகளைச் சம்பாதிப்பது இல்லை. விழிப்புணர்வற்ற அரசியல் சூனியங்கள் அவரை எதிரியாகப் பார்க்கின்றனர். இருந்தும் இவர் கொண்ட சித்தாந்தத்தின் வழிவந்த விமர்சனங்களையும் சுயவிமர்சனங்களையும் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். நாம் கொண்ட சித்தாந்த அரசியலில், பலர் எதிரியுடன் சமரசம் கொண்டு மக்கள் நலனைவிட தங்கள் சுயலாபங்களையே முன்னிலைப் படுத்துவர். இதனால் சில சுய நலமிகள் ஆட்சி மாற்றத்திற்குத் துணைபோய் இருக்கலாம். தோழர் சிவலிங்கம் ஒரு பன்முக ஜனநாயகத் தன்மை வேண்டும் என்று எண்ணி ஆட்சி மாற்றத்திற்குத் துணைநின்றார். ஆனாலும் முதலாளித்துவ சிந்தனாவாதிகளும், வர்க்க எதிரிகளும் எப்படி ஆளுவார்கள் என்பதில் தெளிவற்ற நிலைக்கு ஆளானது விமர்சனத்துக்கு உரியது. இன்று ஆட்சி மாற்றம் ஏற்பட்டு இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. இக்காலகட்டத்தில் அவர்களின் இயலாமையைக் கண்டுகொள்ளலாம்.

யு என் பி (UNP) ஆட்சியில் இனமுறுகல்களும் நாணய மதிப்பிறக்கமும் நடைபெறாத காலம் இல்லை. முன்னைய ஆட்சி முற்றுமுழுக்கச் சரி என்று நான் சொல்லவில்லை. இருந்தும் ஏகாதிபத்திய எதிர்அணி நாடுகளுடான உறவு எம் இறைமையைப் பாதிக்கவில்லை. முன்னைய ஆட்சியில் Rs 129 ரூபாவாக இருந்த US டொலர் இன்று 170 ரூபாவாக உயரும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால்

பணவீக்கம்,
வாழ்க்கைச் செலவு உயர்வு,
பொருட்கள் தட்டுப்பாடு,
விவசாய மானியம் ரத்து,
தனியார் பல்கலைக்கழகம்,
வேலை இல்லாத் திண்டாட்டம்
அரசே எதிர்க்கட்சியை நியமிக்கின்ற ஜனநாயக வரம்புமீறல்
மாணவர் போராட்டங்கள்,
தமிழர்களுக்கான வாக்குறுதி மீறல்கள்,
தொழிலாளர்களை – தோட்டத் தொழிலாளர்களை கணக்கில்கொள்ளாமை,
அபிவிருத்தி ஸ்தம்பிதம்,
மத்திய வங்கி மோசடி

என அடுக்கிக்கொண்டே போகலாம். இவை அனைத்தும் ஆட்சிமாற்றத்தின் பின்னதான கடந்த இரண்டுவருடப் பலன். இதற்குத் தோழர் சிவலிங்கமும் பங்காளியாக இருந்ததை என்னால் இன்னமும் புரிந்து கொள்ள முடியவில்லை. இவைகளை மீறிய தோழமை எம்மை ஒன்றாகவே வைத்துள்ளது. விமர்சனங்களும் சுயவிமர்சனங்களும் எம்முடன் பின்னிப் பிணைந்தவைகளே. இதனைத் தோழமையுடன் சிவலிங்கத்திடம் சமர்ப்பிக்க இந்த வாய்ப்பு பயன்படுகின்றது. இந்த முரணும் உறவும் எம்மை மேலும் செழுமைப்படுத்தும்.

இவர், தோழர் வி பொன்னம்பலத்தின் (VP) வாரிசு என்பதற்கு இது நல்ல உதாரணம். ஸ்தாபனக் கட்டுக்கோப்பை விட ஜனநாயக வாழ்வையே நேசிப்பவர். ஏல்லோராலும் நேசிக்கப்படுவதற்கு இந்த ஜனநாயக, ஜனரஞ்சக வாழ்வும் ஒரு

ஒரு காரணமாக அமைந்தது என்பது மிகையல்ல.

நட்புக்கும், அன்பிற்கும், அறிவுசால் ஆற்றலுக்கும், வயது 70க்குப் பின்பும் நீண்டு வியாபிக்க வாழ்த்துகின்றேன்.

தோழமையுடன்
ந ஜெயபாலன்

*(தோழர் சிவலிங்கமும் தோழர் ஜெயபாலனும் 70களில் யாழ் மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சியில் முன்னணிப் போராளிகளாகச் செயற்பட்டவர்கள்)*

ஒவ்வொரு மனிதனின் வாழ்வும் நுண்ணிய தனித்துவம் கொண்டது. தாயின் கருவாக்கத்தில் தொடங்கி, அது வாழ்க்கை என்ற பாதையில் பயணிக்கும், கடந்து செல்லும் ஒவ்வொரு மயிற்கல்லும் -பிறப்பு, பெற்றோர், சகோதரங்கள், வாழும் சூழல், கற்ற பள்ளி, உறவாடிய தோழர்கள், இளமை காலங்கள், தொழில், குடும்பம், பிள்ளைகள், அரசியல், கருத்தியல் பார்வை, அவை உந்தும் பாதைகள், அவற்றில் வகுத்து கொள்ளும் பொது, சுய நல கொள்கைகள் - என்று பல மாறிகளின் செதுக்கலில் உருவாகும் சிலை தான் மனித வாழ்க்கை.

இன்று எழுபது வயது காணும், எனக்கு கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக்கு மேலாக தெரிந்த என் நண்பர் - தோழர் சிவா பற்றி இங்கு பதிவாகும் வாழ்த்துக்கள், விமர்சனங்கள் எந்த விதத்திலும் முக்கியமானவை அல்ல, அவை நான் கீழ் வரைந்துள்ள அவரது தனித்துவமான பண்புகளுடன் ஒப்புடை சீர் பார்க்கப்படாவிடின். கடந்த அரை நூற்றாண்டாக -நான் அருகேயும், அகலவும் இருந்து பார்த்து ரசித்த இந்த சிவா என்ற பெயர் எனுக்குள் முடுக்கி விடும் உணர்வோட்டங்களே இங்கு சீர் பார்க்க பட வேண்டியவை. நட்பு, தோழமை, சமூகம் சார் கருத்தியல், அதில் தங்கி நிட்க்கும் சீரான கொள்கை, நேர்மை, கொண்ட கருத்தை எமனே மிரட்டிடினும் எடுத்துரைக்கும் பண்பு, எளிமை, என்று என் மனதில் "சிவா" என்ற பெயர் முடுக்கி விடும் அந்த "தனித்துவமான" கூட்டு சீர் தான், இந்த சில வரிகள் மூலமாக நான் சாட்சி பகர, பகிர்ந்து கொள்ள நினைக்கும் கருத்தின் உட்பொருள்.

அவருடன் சக மாணவனாக நடுத்தர பள்ளி சூழலில் வசாவிளான் கல்லூரியில் 60 களில் முற்பகுதியில் அவரை நான் சந்தித்த நாள் தொட்டு; எனது பூர்வீக கிராமம் ஆன பலாலியின் காங்கேசன்துறை தொகுதியில் 70களின் பாராளுமன்ற தேர்தல் களத்தை சிகப்பு கொடி கொண்டு அலங்கரித்த திரு V. பொன்னம்பலத்தின் இளைஞர் பட்டாளத்தின் முதல் வரிசை தொண்டன் ஆனது வரை; பின்பு 1980களின் இடை பகுதியில் தமிழ் தேசியத்தின் ஆயுதம் ஏந்திய அணிகளில் ஒன்றான "தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (TELO - UK )" யின் முன்னணி செயற்பாட்டளர்களில் ஒருவராக அவர் இருந்து "தாயக அக்கரை (றை)" அரசியல் செய்தது வரை;

மேலும் தமிழ் தேசியத்தின் அடக்கு முறை கலாச்சார சூழலில், அதை புரிந்து கொண்டு, அதன் அறுபடை காலங்கள் பாரதூரமான பின் விளைவுகளை கொண்டுவரும் என்ற சரித்திர நியதியை, கருத்தியல் கண்ணோட்டத்தில் கண்டு கொண்டவர்களாக, ஆக்க ரீதியாக, தயங்காமல், ஜனநாயகம், மனித உரிமை, அரசியல் சீர் என்ற பதங்களின் பொருள் கொண்டு தமிழ், சிங்கள தேசியம் இரண்டையும் விமர்சித்த ஒருவர் என்ற ரீதியிலும்;

2009மே முள்ளி வாய்க்கால் குருதி வேட்டைக்கு அப்பாலும், இலங்கை தீவு வாழ் அனைத்து சமூகங்களின் ஜனநாயக சுபீட்சம், அது விதை கொள்ள வேண்டிய புது அரசியல் யாப்பு, இலக்கியம், கல்வி மேம்பாடு, கலாச்சார மீள் கட்டமைப்பு என்று ஓயாது உழைக்கும் "சிவா" என்ற உருவில் இயங்கும் இந்த தனித்துவமான மனித தன்மைக்கு நான் பகரும் சிறு சாட்சி தொகுப்பே இந்த சில வரிகளும், வார்த்தைகளும்.

## சிவா

பள்ளி காணும் பொழுது அறியேன்
நீவிர் பண்பும் சீரான பாங்கும் கொண்டவர் என்று
உம்மை சிவப்பு கொடி புரட்சி ஆளானாய்
கண்ட போதும் அறியேன்
நீவிர் கருத்தியல் செறிவாளன் என்று,
துப்பாக்கி தூக்கியவர்க்கு சித்தாந்தம்
உரைத்த போது கொஞ்சம் உணர்ந்தேன்
நீவிர் தெளிவான சிந்தனையாளன் என்று
இன்றும் அயராது, முகத்து நகை பூக்க, தேநீர்
கொடுத்து
இலக்கியம், கல்வி, ஜனநாயகம்,
அரசியல் யாப்பு, சமத்துவ கோட்பாடு என்று
அலையும் இந்த எழுபது வயது வாலிபன்
வாழ வேண்டும்... பல்லாண்டு

அன்புடன்
ஜேசன்

( ஜேசன் என அழைக்கப்படும் திரு ஜேசன் ஜேசுதாசனும் தோழர் சிவலிங்கமும் ஆரசியல் கலை இலக்கிய அரங்குகளில் ஒன்றாகப் பயணிப்பவர்கள்)

## தோழர் சிவலிங்கத்தின் முயற்ச்சிகளில் இரண்டு

*புலிகளால் படுகொலை செய்யப்பட்ட Telo தலைவர் சிறிசபாரத்தினத்துடன் தொடர்பு கொண்டு தோழர் வி பொன்னம்பலத்தினைக் கொண்டு Telo போராளிகளுக்கு அரசியல் வகுப்புகள் எடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. தோழர் வி பியினால் சில வகுப்புகள் எடுக்கப்பட்டன. ஆனால் காரணம் சொல்லாமல் அவை திடீரென நிறுத்தப்பட்டன.*

*இதே போல Telo தலைவர் சிறிசபாரத்தினத்துக்கும் அப்போதய யாழ் மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளராக இருந்த தோழர் விஜயானந்தனுக்கும் இடையில் ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்தார். Telo தலைவர் சிறிசபாரத்தினத்தின் படுகொலையுடன் அது முடிவுக்கு வந்தது. பின்னர் தோழர் விஜயானந்தனும் புலிகளால் கொலை செய்யப்பட்டார்*

## ஜனநாயகம் வாழ வாழ்த்திடுவோம்!

### தோழர் விஸ்வலிங்கம் சிவலிங்கத்திற்கு அகவை 70வது

இன்றைய மனிதகுலத்தின் தேவைக்கு அப்பால் தனிபட்ட சுயநலத்திற்காக ஜனநாயகம் என்ற சொல்லை பயன்படுத்துகின்ற இக்கால கட்டத்தில் ஜனநாயகத்திற்காக வாழ்கின்ற தோழர் சிவிலிங்கத்திற்கு எங்கள் பிறந்த தின வாழ்த்துக்கள்.

விஸ்வலிங்கம் சிவலிங்கம் மெல்லிய உடல்வாகு. குரலும் அப்படியே. தொனி மெலிதானாலும், சொல்லும் கருத்தில் வலுவிருக்கும், பிடிவாதமுமிருக்கும்.

சைவக்கடவுளின் பெயராக இருந்தாலும், வைதீக சைவ வேளாள உயர்குடிக் கொள்கைகளுக்கு முற்றிலும் முரணானவர். கம்யூனிஸ்ட்டு. நினைப்பிலும் செயலிலும் ஒரு இடதுசாரி. மறுபுறம் ஒரு ஜனநாயகப் போராளியும் கூட.

எமது ரிபிசி 90களில் ஆரம்பித்தவேளைை வானொலியின் ஏற்ற, இறக்க காலங்களில் என்றும் உடனிருந்தவர். தனக்கென ஒரு பாணியை வகுத்து இறுதிவரை தனது அரச-யல்கருத்துக்களை உரத்துப் பேசிவந்தவர். போருடன் போர் தொடுத்தவர், சமரசத்தை சமரசம் செய்யாதவர்.

தனது இடது சாரிச் சிந்தனைகளுக்கூடாக போரினால் எமது மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களையும் அழிவுகளையும் இறுதிவரை வலியுறுத்தியவர்.

போருக்கு எதிரானகருத்துக்களை கூறி வானொலி நடத்திய என்னை விட எனது வானொலியின் நேரலைகளில் அதிகம் விமர்சனத்துக்குள்ளானவர், நிந்திக்கப்பட்டவர். ஆனால், அதற்காக தனது கருத்தில் இருந்து என்றும் விலக அவர் முன்வரவில்லை. அதில் சமரசம் எதுவும் செய்யவில்லை. மாறக தனது கருத்தினை தொடர்ந்து வலியுறுத்தி வந்தவர்.

பல கேளிக்கை நிகழ்ச்சிகளுக்காக ரிபிசி வானொலி ஆயிரக்கணக்கில் நேயர்களை கவர்ந்திருந்த காலம் அது. ஆனால், சிவலிங்கம் அவர்களின் வியாழக்கிழமைகளில்அரசியல் கலந்துரையாடல்களுக்கும், ஞாயிற்றுகிழமைகளில் ஒலி-பரப்பாகிய அரசியல் ஆய்வை செவிமடுப்பதற்கும் அப்போது பல ஆயிரக்கணக்கான நேயர்கள்ஐரோப்பாவில் இருந்தனர்.

ஆதரவானவர்களை விட அன்று இவரது நிகழ்ச்சிக்கு எதிரிகள் அதிகம். அவரது நிகழ்ச்சிகளை நிறுத்த வேண்டும் என்ற நிர்ப்பந்தங்களும் பல. ஆனால், இவர் சொன்ன உண்மைகள் உறைத்ததாலும், அவர் கருத்தின் ஆழத்தாலும் கவரப்பட்ட வானொலி நிர்வாகம் என்றும் அதற்குஉடன்படவில்லை. போர் புனிதமானதாக வாதிட்ட பலர் இவருக்கு கொடுத்த பட்டப்பெயர் ''துரோகி''.

அவருக்கு வந்த அழுத்தங்களைப் பார்த்து கலையகமே மனதில் அழுதிருக்கிறது. நேரடி நிகழ்ச்சிகளில் இவர் நிந்திக்கப்பட்ட வேளைகளில் எங்கள்அனைவரின் இதயத்திலும் இரத்தம் வடிந்த நாட்கள் பல. இவரை எதிர்த்து கருத்துக் கூறவந்தவர்கள் உணர்ச்சிவசப்பட்டு பெருங்குரல் கொடுத்து கத்துவார்கள், திட்டுவார்கள். ஆனால், இவர் என்றும் அதிர்ந்து பேசியது கிடையாது.

எந்த நிந்தனைக்கும் மிகவும் ஆறுதலாக, அடக்கமாக பதில் சொல்வார். ஆனால், அசையமாட்டார். பலரது சினம் கண்டு, அறியாமை கண்டுமெதுவாக புன்முறுவல் பூப்பது இவரது இயல்பு. எந்த விவாதத்தின் போதும் தனது கருத்துகளை, ஒழுங்குபடுத்தி, ஒவ்வொன்றாக வரிசைக்கிரமமாக விபரிப்பார்.

இவரது கருத்துக்களின் ஆழம் எவ்வளவு பேருக்கு புரிந்தது என்று எமக்கு தெரியாது. ஆனால், அவரின் கருத்துக்கள் உண்மையான நாளும் ஒருநாள் வந்தது. அதே போரின் உக்கிரத்தில் மக்கள் கொத்துக்கொத்தாக இறந்து மடிந்தபோது, அதேவானொலி நிகழ்ச்சியில் நேரலையில் வந்தநேயர்கள், இவர் சொன்னவை யதார்த்தமாகி உள்ளதை நேரடியாக

நேரடியாக ஒப்புக்கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டனர். ஆனால் அன்று சிவலிங்கம் அண்ணர் அழுதார். கலையகத்தில் ஒலிவாங்கியின் முன்பாக அமைதியாக அமர்ந்து நேயர்களின் கருத்தைகேட்டுக்கொண்டிருந்த அவரது கண்களில் இருந்து கண்ணீர் கொட்டிக்கொண்டிருந்தது.

தனது கருத்து உணரப்பட்டதற்காக அழுதாரா அல்லது அழிந்துபோன மக்களுக்காக அழுதாரா தெரியாது. ஆனால், அதுதான் மக்களுக்காக சிந்தித்து, பேசிய ஒரு வானொலி கலைஞனுக்கு கிடைத்த மரியாதை. கடந்த 3 வருடங்களாக வெளிநாடு வாழ் இலங்கைத் தமிழர் அமைப்பை ஏற்படுத்தி கடுமையாக செயற்பட்டு வருகின்றோம் .இவ்வமைப்பு ஊடாக பல்வேறுபட்ட அரசியல் தலைவர்களைச் சந்திக்கின்ற சந்தர்ப்பங்கள் கிடைக்கிற போதெல்லாம் எம் மக்கள் சந்தித்த அழிவுகள் பற்றியும் ஒரு அரசியல் தீர்வுக்கான விடயங்களை எமது அமைப்பு சார்பாக முன் வைக்க என்றுமே தவறியதில்லை.

கடந்த 16 வருடங்களாக வியாழக்கிழமைகளில் இடைவிடாத ரீ பி சியில் ஒலிபரப்பாகிய அரசியல் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டது போலவே இப்போதும் அதே வேகத்துடன் அரசியல் சந்திப்புகளில் கலந்து கொண்டு செயற்படுவது எமக்கு மிக மகிழ்ச்சியைத் தருகின்றது.

**உங்களை என்றும் ரிபிசி மறக்காது சிவலிங்கம் அண்ணன்.**

**எமதுஉறவுகளின் சார்பில் 70வது பிறந்ததின வாழ்த்துக்கள்.**

**வீ. இராம்ராஜ்**

திரு இராம்ராஜ் நடாத்திய வானொலியில் தோழர் சிவலிங்கம் அரசியல் நிகழ்ச்சிகளை மிக நீண்டசகாலம. நடாத்தியவர்.

## 60வது பிறந்த தினத்தன்று (16.03.2007)

## **தேனி**யில் வந்த கட்டுரையின் மறுபிரசுரம் (ஒரு பகுதி)

இலண்டனிலிருந்து ஒலிபரப்பாகும் தமிழ் ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் (TBC) அலைவரிசையில் வாரந்தோறும் வியாழக்கிழமைகளில் ஒலிபரப்புப்பட்டுவந்த அரசியல் கலந்துரையாடல் நிகழ்ச்சி மூலம் எங்கள் எல்லோருக்கும் நன்கு அறிமுகமாகிய, திரு. விஸ்வலிங்கம் சிவலிங்கம் அவர்களுக்கு இன்று (16-03-2007) அறுபது வயதாகின்றது. ஐரோப்பிய புலம்பெயர் தமிழ் சமூகத்தின் தற்போதைய சிறந்த மேடைப்பேச்சாளராகிய இவர், ஏறத்தாள 40 வருட காலத்திற்கு முன்னர் இடதுசாரி அரசியலில் தனது சமுதாயப்பணியினைத் தொடங்கி இன்றுவரை, கட்சிகள் மற்றும் அமைப்புகள் சார்ந்திருந்தும் தனிமனிதனாகவும், தமிழ் பேசும் மக்களின் ஜனநாயகத்திற்கும் மனித உரிமைகளுக்காவும் குரல் கொடுத்தும் போராடியும் வருகின்றார். தமிழீழத்திற்கான ஆயுதப்போராட்டம் என்பது அரசியல் படுகொலைகளின் களமாகவும், தமிழ்ப்பாசிஸ்டுகள் தலைமையிலான அதிகாரமையமொன்றை நிறுவுவதற்கான முன்னெடுப்பாகவும் மாற்றமடைந்துள்ளது. இதனால் யுத்தம் தவிர்ந்த பேச்சுவார்த்தை மூலமான தீர்வொன்றினை இவர் நம்பி வருகின்றார்.

ரி.பி.சி. வானொலி பல்வேறு வகைப்பட்ட நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்குகின்றபோதிலும், அதனது அரசியல் கலந்துரையாடல் நிகழ்ச்சியின் மூலமாகவே ஆதரவாளர்களையும் எதிரிகளையும் சம்பாதித்தது. ஜனநாயகத்திறகும் மாற்றுக்கருத்திற்குமான ஒரேயொரு தமிழ் வானொலியாகிய தமிழ் ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் ஒலிபரப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பதால், அரசியல் கலந்துரையாடல் நிகழ்ச்சி மூலம் திரு.சிவலிங்கம் அவர்களின் குரலைக் கேட்க முடியாது இவரது ஆதரவாளர்கள் மற்றும் ரி.பி.சி.நேயர்கள் அண்மைக்காலமாக மிகவும் சலிப்படைந்துள்ளனர்.

அரசியல் கலந்துரையாடல் என்ற ஒரேயொரு நிகழ்ச்சிக்காக மாத்திரமாவது ரி.பி.சி. மீண்டும் வானலைகளில் வரவேண்டும் என்பதே பலரது அபிப்பிராயமாக உள்ளது.

யாழ்ப்பாண மாவட்டம் தெல்லிப்பழையிலுள்ள கட்டுவன் கிராமத்தில் விவசாயக் குடும்பமொன்றில் பிறந்த திரு.சிவலிங்கம், வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரியின் பழைய மாணவர். 1972 ஆண்டிலிருந்து 1983 ஆண்டு இலண்டனுக்கு வரும்வரையில் கட்டிடப் பொருட்கள் திணைக்கழகத்தின் காசாளாராக கடமையாற்றினார்.

திரு. சிவலிங்கம் அவர்கள் மிகவும் அமைதியானவர், எளிதில் உணர்ச்சிவசப்படமாட்டார். ரி.பி.சி வானொலியில் இலங்கையின் தேசிய இனங்களின் பிரச்சனைகள் தொடர்பாகவும், இரு தசாப்த காலத்திற்கு மேலாக நீடித்துவரும் யுத்தம்பற்றியும் அவரது அரசியல் சமூக பொருளாதார ஆய்வுகள் உலகெங்கிலும் வாழும் தமிழ் பேசும் மக்களிடையே பெரும் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் இலண்டனிலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலுமுள்ள குறுந்தேசியவாதிகளினதும் ஜனநாயகத்திற்கெதிரான சக்திகளினதும் வெறுப்புக்குள்ளானார். ஏகபிரதிநிதித்துவத்தை வேண்டிநிற்கும் புலிகளின் ஆதரவாளர்களினால் இலணடனில் பல தடைவைகள் மிரட்டப்பட்டார். அரசியல் கலந்துரையாடல் நிகழ்வொன்றின்போது ரி.பி.சி வானொலி நிலையத்தில் வைத்து இவரையும் மற்றும் சிலரையும் புலிகள் தாக்க முனைந்தனர்.

அண்மையில் இலண்டனில் மறைந்த ஈரோஸ் ஸ்தாபகர் திரு.இரத்தினசபாபதியின் இறுதி நிகழவின்போது, இலண்டனைச் சேர்ந்த முன்னைநாள் ஈரோஸ், தற்போதைய புலி ஆதரவாளர் தங்கேஸ் என்பவர் இவரது ரி.பி.சி. ஆய்வுகளுக்காக இவரைத் தாக்க முற்பட்டுள்ளார்.

இவரது அரசியல் பிரவேசம் 1969 ஆண்டளவில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (மாஸ்கோ சார்பு) வாலிப முன்னணியில் ஆரம்பித்தது. வாலிப முன்னணியின் யாழ்ப்பாண மாவட்ட செயற்குழுவின் முக்கிய நபராக செயற்பட்டார்.

பின்னர் 1970 - 1977 காலப்பகுதிகளில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினைச்சேர்ந்த மறைந்த திரு.வி.பொன்னம்பலத்திற்கு மிகவும் நெருக்கமானவராக திகழ்ந்தார். மேலும் இக்காலப்பகுதியில் யாழ் மாவட்டத்தின் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதான பிரச்சாரப் பீரங்கியாகவும் இருந்தார்.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறைத்தொகுதி 1970 ஆண்டு பொதுத்தேர்தலிலும், பின்னர் 1975 இடைத்தேர்தலிலும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மறைந்த திரு.வி.பொன்னம்பலத்தினை ஆதரித்து தீவிரமாக பிரச்சாரத்தில் ஈடுபட்டார். இவ்விரு தேர்தல்களிலும் காங்கேசன்துறைத்தொகுதியில் தமிழரசுக்கட்சி மற்றும் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் மறைந்த திரு.எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களை எதிர்த்தே மறைந்த திரு.வி.பொன்னம்பலத்திற்கு சார்பாக பிரச்சாரம் செய்யவேண்டியிருந்தது.

1970, 1975 ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் திரு.வி.பொன்னம்பலம் தோல்வியினைத் தழுவினாலும் 1970 ஆண்டிலிருந்து இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, சமசமாஜக்கட்சியுடன் இணைந்திருந்தது.

திரு.எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களையும், தமிழர் விடுதலைக்கூட்டணியையும் ஆதரிக்காத எந்தவொரு அரசியற்கொள்கையைக் கொண்டவர்களும் பகைவர்களாகவும், தமிழர்களின் அரசியல் உரிமைகளுக்காக போராட முன்வராதவர்களுமாகவே அக்காலகட்டத்தில் கருதப்பட்டனர். இதனால் அக்காலந்தொட்டே பல அச்சுறுத்தல்களை எதிர்நோக்கியே வந்துள்ளார். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (மாஸ்கோ சார்பு) அம்பனை - தெல்லிப்பழைப்பகுதியல் முக்கியஸ்தர்களாக இருந்து, இப்பொழுது இலண்டனில் வாழும் திரு.சிறிகெங்காதரன் மற்றும் கனடாவில் வாழும் திரு.நந்தீஸ்வரன், திரு.கார்த்திகைக்குமார் போன்றவர்களே அக்காலகட்டத்தில் இவருக்கு பக்கபலமாக இருந்தனர்.

***(தோழர் சிவலிங்கத்தின் 60வது பிறந்த தினத்தின் போது வந்த கட்டுரையின் ஒரு பகுதி)***



